**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 124 of 2020**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : ஜானகி** | **Father/Husband's Name : பாக்கியராஜ்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 22.07.2026.**
**Accused absent. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கணக்கன்பட்டியில் குடியிருந்து வீட்டை கவனித்து வருகிறேன். எதிரி ராதாகிருஷ்ணன் எனது கொளுந்தனார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 10.10.2018ம் தேதி காலை 10.00 மணியளவில் நானும், எனது மாமியாரும் வீட்டில் இருந்தபோது எதிரி ராதாகிருஷ்ணன் குடிபோதையில் வந்து என்னை பார்த்து தேவிடியா, அவுசாரி மகளே, நீயும் உன் புருசனும் சேர்ந்து எனக்கு பாதை விடமாட்டுகிறேங்க என்று சொல்லியும் என்னை மாறி மாறி கையால் தலையிலும், கை, கால்களிலும் அடித்து கீழே தள்ளிவிட்டு எனது சேலையை பிடித்து உருவி அருகில் இருந்த படல் மேல் தள்ளிவிட்டார். பின்னர் எனது மாமியார் வீரம்மாள் விலக்கிவிட்டார். நான் சத்தம்போடவே அக்கம்பக்கத்தினர் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். எதிரி ராதாகிருஷ்ணன் என்னை பார்த்து என்னைக்கா இருந்தாலும் உன் சாவு என் கையில் தான் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார். பின்னர் நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 17:53:27 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 124 of 2020**

**Deposition of Witness P.W.2**

**Name : பொன்ராஜ்** **Father/Husband's Name : சிவராஜ்(எ)ராஜ்**

**Village :** **Taluk :**

**Caste :** **Calling :**

**Religion :** **Age :**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 22.07.2026.**

**Accused absent. Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கணக்கன்பட்டி கொட்டம்பட்டியில் குடியிருந்து கொய்யா வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது பக்கத்துவீட்டுக்காரர். எதிரி ராதாகிருஷ்ணன் அ.சா.1ன் கொளுந்தனார். எனக்கு வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 10.10.2018ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது அ.சா.1ம், எதிரி ராதாகிருஷ்ணனும் சண்டையிட்டு கொண்டார்கள் எனவும், அதில் எதிரி ராதா கிருஷ்ணன் அ.சா.1ன் சேலையை பிடித்து உருவி, அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாக போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

3. இல்லை.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.22 17:53:32 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 124 of 2020**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : செல்வி(எ)மரியசெல்வி** | **Father/Husband's Name : ராஜு** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 22.07.2026.**

**Accused absent. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கணக்கன்பட்டி கொட்டம்பட்டியில் குடியிருந்து வீட்டை கவனித்து வருகிறேன். அ.சா.1 ஜானகி எனது பக்கத்துவீட்டுக்காரர். எதிரி ராதாகிருஷ்ணன் அ.சா.1ன் கொளுந்தனார். எனக்கு வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. கடந்த 10.10.2018ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது அ.சா.1ம், எதிரி ராதாகிருஷ்ணனும் சண்டையிட்டு கொண்டார்கள் எனவும், அதில் எதிரி ராதா கிருஷ்ணன் அ.சா.1ன் சேலையை பிடித்து உருவி, அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அ.சா.1 சத்தம் போட்டதால் நாங்கள் சென்று சண்டையை விலக்கிவிட்டதாகவும், போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. இல்லை.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 17:53:37 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 124 of 2020**

**Deposition of Witness P.W.4**

| | |
|---|---|
| **Name : சீதாலட்சுமி** | **Father/Husband's Name : கர்ணன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 22.07.2026.**
**Accused absent. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கணக்கன்பட்டியில் குடியிருந்து பழ கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஜானகி எனது பக்கத்துவீட்டுக்காரர். எதிரி ராதாகிருஷ்ணன் அ.சா.1ன் கொளுந்தனார். எனக்கு வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. கடந்த 10.10.2018ம் தேதி அ.சா.1–ம் அவரது மாமியாரும் வீட்டில் இருந்தபோது அ.சா.1ம், எதிரி ராதாகிருஷ்ணனும் சண்டையிட்டு கொண்டார்கள் எனவும், அதில் எதிரி ராதா கிருஷ்ணன் அ.சா.1ன் சேலையை பிடித்து உருவி, அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அ.சா.1 சத்தம் போட்டதால் அக்கம்பக்கத்தினர் சென்று சண்டையை விலக்கிவிட்டதாகவும், மேற்படி சம்பவத்தை கேள்விபட்டதாகவும், போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 17:53:57 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 124 of 2020**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : ஞானசேகரன்** | **Father/Husband's Name : தர்மகண்ணு** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 22.07.2026.**

**Accused absent. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கணக்கன்பட்டியில் குடியிருந்து நாதஸ்வரம் வாசிக்கும் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 11.10.2018ம் தேதி மாலை 3.00 மணியளவில் நானும், பிரபு என்பவரும் ஜானகி என்பவரது வீட்டருகே நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், பிரபு என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. போலிசார் கேட்டு கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 17:54:18 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**